## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 278 நாள் : 18.09.2022

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆறுகள், ஏரிகள், நீர்வழிக் கால்வாய்கள் உட்பட 23 நீர்நிலைகளில் 4,775 மெட்ரிக் டன் வண்டல்கள் தூர்வாரப்பட்டு, ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டுள்ளன.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீரானது மழைநீர் வடிகால்களின் வழியே கொண்டு செல்லப்பட்டு நீர்வழிக் கால்வாய்களின் மூலம் வெளியேற்றப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆறுகள், நீர்வழிக் கால்வாய்கள் மற்றும் ஏரிகள் போன்ற நீர்நிலைகள் பொதுப்பணித்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களில் உள்ள வண்டல்களை அகற்றி தூர்வார உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, தற்பொழுது, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நீர்நிலைகளில் தேங்கியுள்ள வண்டல்கள் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை மேற்கொள்ள நீரிலும், நிலத்திலும் இயங்கக்கூடிய ரொபாடிக் எக்ஸ்கவேட்டர், ஆம்பிபியன் போன்ற நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் உள்ள ஆறுகள், ஏரிகள் மற்றும் நீர்வழிக் கால்வாய்கள் போன்ற நீர்நிலைகளில் 23 நீர்நிலைகளில் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு தூர்வாரும் பணிகளின் மூலம் 4,775 மெட்ரிக் டன் அளவிலான வண்டல்கள் மற்றும் ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டுள்ளன.

இந்த நீர்வரத்துக் கால்வாய்கள் செல்லும் முக்கிய சாலைகளில் பல்வேறு இடங்களில் குறுக்குப் பாலங்கள் (Culvert) உள்ளன. குறிப்பாக மாம்பலம் கால்வாய் செல்லும் தியாகராய நகர், ஜி.என். செட்டி சாலை, விஜயராகவா சாலை, சர்.பிட்டி தியாகராய சாலை, வெங்கட் நாராயணா சாலை, மூப்பாரப்பன் தெரு, சி.ஐ.டி. நகர் 4வது பிரதான சாலை, தெற்கு உஸ்மான் சாலை, சி.ஐ.டி.நகர் வடக்கு சாலை ஆகிய இடங்களில் உள்ள குறுக்குப் பாலங்களின் (Culvert) கீழ்ப்பகுதிகளில் நவீன இயந்திரங்களை கொண்டு வண்டல்கள் தூர்வாரி அகற்றப்பட்டுள்ளன.

மாம்பலம் கால்வாயில் இதுவரை 750 மெட்ரிக் டன் வண்டல்கள் மற்றும் கழிவுகள் தூர்வாரி அகற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வண்டல்கள் அகற்றப்பட்ட நீர்நிலைகள் விவரம்**

| வ. எண் | நீர்நிலையின் பெயர் | வண்டல் அகற்றப்பட்ட பகுதிகள் | அகற்றப்பட்ட வண்டல்கள் மற்றும் கழிவுகளின் அளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| 1. | அடையாறு | ஈக்காட்டுத்தாங்கல் பாலம் முதல் ஆலந்தூர் குறுக்குப் பாலம் வரை | 250.00 |
| 2. | வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் | பாரதிநகர் / கண்ணகி நகர்/ கொருக்குப்பேட்டை/ ஹரிநாராயணாபுரம்/ பேசின் பாலம்/ ஸ்டான்லி நகர்/ உட்வார்ப் | 790.00 |
| 3. | கேப்டன் காட்டன் கால்வாய் | தீயணைப்பு நிலையம் / சந்திர சேகர் நகர் | 120.00 |
| 4. | இணைப்பு கால்வாய் | எழில் நகர் | 75.00 |
| 5. | கூவம் ஆறு | கன்னிமரா பாலம் | 105.00 |
| 6. | பள்ளிக்கரணை சதுப்பு நிலம் | பள்ளிக்கரணை | 430.00 |
| 7. | ஆதம்பாக்கம் ஏரி | ஆதம்பாக்கம் | 130.00 |
| 8. | எண்ணூர் குளம் | எண்ணூர் | 80.00 |
| 9. | கூவம் ஆறு | எம்.எம்.சி. எதிரில் | 120.00 |
| 10. | ஹரிதாஸ் தாமரைக் குளம் | கொளத்தூர் | 55.00 |
| 11. | வேளச்சேரி ஏரி | வேளச்சேரி | 450.00 |
| 12. | தரமணி ஏரி | தரமணி நிலையம் அருகில் | 350.00 |
| 13. | தட்டான் குப்பம் கால்வாய் | தாதன் குப்பம் | 40.00 |
| 14. | பெரியதோப்பு ஏரி | மணலி | 45.00 |
| 15. | இணைப்பு கால்வாய் | கொடுங்கையூர் | 40.00 |
| 16. | விருகம்பாக்கம் கால்வாய் | ராமலிங்கம் நகர் | 180.00 |

| | | | |
|---|---|---|---|
| 17. | வடக்கு அவென்யூ கால்வாய் | கொரட்டூர் | 40.00 |
| 18. | பாடிக்குப்பம் கால்வாய் | புதுநகர் / பவுடர் மில்ஸ் சாலை | 160.00 |
| 19. | ஓட்டேரி கால்வாய் | எஸ்.எஸ்.புரம் | 130.00 |
| 20. | ஏகாங்கிபுரம் கால்வாய் | மங்களாபுரம் | 140.00 |
| 21. | மாம்பலம் கால்வாய் | கிரியப்பா சாலை முதல் வெங்கட் நாராயணா சாலை வரை | 750.00 |
| 22. | ட்ரஸ்ட்புரம் கால்வாய் | ஆத்ரேயபுரம் / சங்கரபுரம் / திருவள்ளுவர் நகர் | 150.00 |
| 23. | நந்தம்பாக்கம் கால்வாய் | எல்.&டி. அருகில் முகலிவாக்கம் | 135.00 |
| **மொத்தம்** | | | **4,775.00** |

மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட தூர்வாரும் பணிகளை பருவமழைக்கு முன்னதாக முடிக்கும் வகையில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**